# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

### அ.சா. 13 (LW 18 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி.ரீனாஜோஸ்** | **தொழில்** | **மருத்துவர்** |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **03.03.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 .2 எதிரிகள் ஆஜர்.

மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது 26.08.2022 அன்று பிற்பகல் 03.25 மணிக்கு தலைமை காவலர் 248 இராமகிருஷ்ணன் என்பவர் மூலம் ராம்குமார் வயது 31, த/பெ. அழகுசாமி ,முத்தனங்கோட்டை, வேல்வார்கோட்டை என்ற முகவரியை சேர்ந்த நபரை வேண்டுகோளின் அடிப்படையில் பிரேதத்தை விபத்து பதிவேட்டு எண். 5688 பதிவு செய்து பிரேதத்தை அரசுமருத்துவமனை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் **அ.த.சா.ஆ.10.** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.10 . விபத்து பதிவேடானது கார்பன் காப்பி என்றால் சரிதான். விபத்து பதிவேட்டின் அசல் மருத்துவமனையில் இருக்கும். பிரேதம் எந்த நிலையில் காணப்பட்டது என்ற விவரத்தை விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. பிரேதத்தில் முகத்திலும், தலையிலும் காயங்கள் இருந்ததற்கான குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். பிரேத்தில் காணப்பட்ட உடைகள் பற்றி குறிப்பு இல்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடு சம்மந்தமாக எந்த காவல்துறையினர் விசாரித்தனர் என்பது தற்போது ஞாபகம் இல்லை. அ.த.சா.ஆ.10 . விபத்து பதிவேட்டை நான் யாரிடமும் கொடுக்கவில்லை.

**மறுவிசாரணை –இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 20:25:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.